செ.வெ.எண்: 533 நாள்: 23.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**ஊரக உள்ளாட்சி தற்செயல் தேர்தல்-2021 தேர்தல் பார்வையாளர்**
**திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள்,**
**தேர்தல் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், ஊரக உள்ளாட்சி தற்செயல் தேர்தல் பார்வையாளர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் ஊரக உள்ளாட்சி தற்செயல் தேர்தல் பணிகள் குறித்து அலுவலர்களுடன் இன்று (23.09.2021) ஆய்வு மேற்கொண்டார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 30.06.2021 வரை காலியாக உள்ள பதவியிடங்களுக்கு தற்செயல் தேர்தல்கள் எதிர்வரும் 09.10.2021 அன்று நடைபெறவுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மாவட்ட ஊராட்சி வார்டு எண்.9, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு எண்.5, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கீழப்பனையூர், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் மாங்காடு, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம் அரசமலை, கீழத்தானியம், மறவாமதுரை ஆகிய கிராம ஊராட்சி தலைவர் பதவியிடங்களுக்கும், 12 ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள 41 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும் தற்செயல் தேர்தல்கள் நடைபெறவுள்ளது.

இத்தற்செயல் தேர்தல்கள் 2021-க்கு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தேர்தல் பார்வையாளராக திரு.சு.கணேஷ், இ.ஆ.ப., இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி, அரும்பாக்கம், சென்னை அவர்கள், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டு இன்று (23.09.2021) புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தந்து, புதுக்கோட்டை மாவட்டத்தில் காலியாக உள்ள மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் நடைபெறும் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் வாக்கு எண்ணிக்கை இடமாக அமைக்கப்பட்டுள்ள வட்டார சேவை மைய கட்டடத்தினையும், வாக்குப்பெட்டி பாதுகாப்பு அறையாக அமைக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்ட அறையினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுடன் கலந்துரையாடி தற்செயல் தேர்தல்களை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகளை புதுக்கோட்டை மாவட்ட ஊரக உள்ளாட்சி தற்செயல் தேர்தல் பார்வையாளர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள், வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (உள்ளாட்சி தேர்தல்கள்) கிருஷ்ணமுர்த்தி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

-----------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**